பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 6 (21—12—67) வியாழன் ★ வெளியூர்: மார்கழி 7 (22—12—67) வெள்ளி [இதழ்: 158

## ஒரு வார அரிசி இலவசம்!

### புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் தமிழக அரசின் உதவி

புயலால் பாதிக்கப்பட்ட இராமேசுவரம், தங்கச்சிமடம், பாம்பன் ஆகிய பகுதிவாழ் மக்கள் அனைவருக்கும் ஒரு வாரத்துக்குரிய அரிசியை இலவசமாக வழங்குமாறு தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

குடும்ப அட்டை வைத்துள்ள அனைவரும் இலவசமாக அரிசி பெறுகின்றனர்.

# சங்கரி இடைத்தேர்தல் முடிவு



## கழக வேட்பாளர் வீரமணி வெற்றி

சங்கரி, டிச. 21—

தமிழகச் சட்டமன்றத்திற்கு சங்கரித் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் சிறப்பான வெற்றி பெற்றிருக்கிறது.

கழக வேட்பாளர் சி. வீரமணி காங்கிரசு வேட்பாளரை 11,544 வாக்குகள் வித்தியாசத்தில் முறியடித்து வெற்றி வாகை சூடினர்.

## சகிப்புத்தன்மை-- புது இலக்கணம்!

உத்தரப் பிரதேச சட்டமன்றத்தில் ஆட்சிமொழித் திருத்த மசோதா, மாநில தொழில் துறையின் மசோதா ஆகியவற்றின் ஆங்கிலப் பிரதிகள் இன்று எரிக்கப்பட்டன!

உத்தரப் பிரதேச அமைச்சர்கள் இருவர் டிசம்பர் 12-ல் சட்டத்தை மீறி நடந்துகொண்டமைக்கு வருத்தம் தெரிவிக்கும் தீர்மானத்தை விவாதித்துக்கொண்டிருக்கையில், ஏ. கே. சதுர்வேதி ரகேஷ் என்ற ச. சோ. உறுப்பினர் திடீரென்று எழுந்து ஆட்சி மொழித் திருத்த மசோதாவின் ஆங்கிலப் பிரதியைக் கொளுத்தினர்!

அவரைத் தொடர்ந்து சந்திர பாலி சிங் என்ற சோஷலிஸ்டு உறுப்பினர், மாநில அரசின் தொழில்துறை மசோதாவின் ஆங்கிலப் பிரதியைக் கொளுத்தினர்!

"மூலத் தீர்மானம் இந்தியில் தானே இருக்கிறது" என்று சுட்டிக்காட்டியும்கூட, "ஆங்கில மொழி பெயர்ப்பைத் தருவதுகூட அவமானகரமானது" என்று கூறிக் கொளுத்தினராம்—சந்திரபாலி சிங்.

"இந்தி தவிர வேறெந்த மொழியையும் சகித்துக்கொள்ள நாங்கள் தயாராயில்லை" என்ற தம் வெறித்தனத்தை, இப்படி வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்!

ச. சோ. உறுப்பினரின் சார்பில் முதலமைச்சர் வருத்தம் தெரிவித்துக் கொண்டாராம்.

இந்தி தெரியாமல் விழிக்கின்றவர்களுக்கு இந்தி வெறியர்கள், ஆங்கில மொழி பெயர்ப்பும் தரமாட்டார்களாம்! தப்பித்தவறி ஆங்கில நகல் தரப்பட்டால், அதையும் இந்திக்காரர்கள் அனுமதிக்கமாட்டார்களாம்!

சகிப்புத்தன்மைக்குப் புது இலக்கணம் வகுக்கிறார்கள்!

# வெளிப்பட்டுவிட்டது சொரூபம்!

## இந்தி தெரியாதவர்கட்கு டில்லியில் வேலை இல்லை

### விவசாயக் குழுக் கூட்ட முழு நடவடிக்கையும் இந்தியில்-- கலந்துகொண்ட கழக உறுப்பினர் மனங்குமுறி வெளிநடப்பு!

புதுடில்லி, டிச. 20—

இந்தி வெறியர்களின் பேச்சுக்களும், புதுடில்லித் தலைவர்களின் உறுதிமொழிகளும் நீர்மேல் எழுத்துக்கு நேரானவை என்பதை இந்தியத் துணைக்கண்டம் இன்று புரிந்துகொண்டுவிட்டது!

"இந்தி தெரியாததால் எத்தகைய பாதகமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வோம்; இந்தி மட்டுமே பயன்படுத்தப்படும் நிலைகளிலும் ஆங்கில மொழிபெயர்ப்பு தரப்படும்" என்று, நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அச்சேறி, மைகூட இன்னம் உலரவில்லை! அதற்குள், இந்தி வெறியர்களின் இழிதகைமை வெளிப்பட்டுவிட்டது!

புதுடில்லியில், நாடாளுமன்ற விவசாயக் குழுவின் கூட்டம் நடைபெற்றது; அந்தக் குழுவில், நாடாளுமன்ற தி. மு. கழக உறுப்பினர் திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி ஓர் உறுப்பினர் ஆவார்.

கூட்டம் தொடங்கிற்று; நடவடிக்கைகள் இந்தியிலேயே நடைபெற்றன. பதினைந்து நிமிடங்கள் வரை பொறுமையாக இருந்த திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி,

"எல்லாம் இந்தியில் நடைபெறுவதால் எனக்கு ஒன்றும் புரியவில்லை"

என்று சுட்டிக்காட்டி, அதுவரை நிகழ்த்தப்பட்ட இந்திப் பேச்சுக்களின் மொழிபெயர்ப்பைத் தமக்குத் தரும்படியும் மத்திய உணவு அமைச்சர் திரு. ஜெ ஜீவன்ராம் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

அதற்கு ஜெகஜீவன்ராம்,

"விவசாய ஆலோசனைக் குழு நடவடிக்கைகளை இனி இந்தியில்தான் நடத்த வேண்டுமென்று ஏற்கனவே முடிவு செய்தாகிவிட்டது"

என்று சொன்னாராம்.

"அப்படியானால், நான் இங்கே இருந்து பலனில்லை; உங்கள் கூட்டத்தை நீங்கள் நடத்திக் கொள்ளுங்கள்"

என்று சொல்லிவிட்டுத் திரு. கிருஷ்ணமூர்த்தி, தம் தாள்களைச் சுருட்டிக்கொண்டு கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார்!

"உறுப்பினர்களுக்குப் புரியாமல் அப்படி ஒரு குழுவில் ஆலோசனை நடக்குமானால், அதைப் புரிந்தவர்கள் கலந்துகொள்ளட்டும்; எங்களுக்கென்ன வந்தது?"

என்ற பொருள்படக் கிருஷ்ணமூர்த்தி பேசியிருப்பது, 'தென்னக மக்களின் உணர்ச்சியின் உச்சகட்டம்' என்பதை புதுடில்லி புரிந்துகொள்ள வேண்டும்.

இதோ....

## இரண்டாம் எட்டப்பன்!

"நான் இந்த மசோதாவை முழு மனத்தோடு வரவேற்கிறேன்.

"இந்த மசோதா, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து விரும்பி ஏற்றுக்கொண்ட சமரச முயற்சியின்பேரில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

"எல்லா மக்களும் விரும்பி இந்தியை ஏற்றுக்கொள்ளும் வகையில் இது வழி வகுக்கிறது."

காங்கிரசு உறுப்பினர்
டி. செங்கல்வராயன்,
(நாடாளுமன்ற மேலவையில்)

விளம்பரமல்ல!

## காணவில்லை...!

தமிழகத்திலிருந்து டெல்லி நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று 'தேசிய சிங்கங்களை'க் காணவில்லை—அதாவது, நாடாளுமன்ற நடவடிக்கைகள் எவையிலும் அவர்களின் மூச்சுப் பேச்சுக் காணவில்லை!

அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைத் தயவு செய்து தமிழக மக்களுக்கு அறிவிக்குமாறு இதன்மூலம் வடக்கில் உள்ள 'சகோதரர்கள்' கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்!

## சட்டத்துறையில் இந்தி தலைகாட்ட முடியாது!

### தலைமை நீதிபதி கருத்து

"இன்னம் இருபத்தைந்து ஆண்டுகளுக்குச் சட்டத் துறையில் இந்தி ஆட்சி மொழி ஆவதற்கு வாய்ப்பு ஏதும் இல்லை"

என்று பெருமுறை மன்ற (சுப்ரீம் கோர்ட்) தலைமை நீதிபதி திரு. கைலாசநாத் வாஞ்சு கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# விந்தியத்திற்குத் தெற்கே இந்தி எதிர்ப்பு உணர்ச்சி!

## 'விரைந்து பரவும்' என்கிறார் கஜேந்திர கட்கர்

"இந்திக்கும்—ஆங்கிலத்துக்கும் இடையே உள்ள மோதல் இப்படி நீடித்துக்கொண்டே போகுமானல், தமிழகத்தில் மட்டும் இருக்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தென்னகம் முழுமையும் பரவிவிடும்"

என்று எச்சரித்தார்—பம்பாய்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும், முன்னாள் பெருமுறை மன்ற (சுப்ரீம் கோர்ட்) நீதிபதியுமான திரு. பி. பி. கஜேந்திர கட்கர்.

ஐதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரையாற்றிக் கொண்டிருந்த திரு. கஜேந்திர கட்கர், திடீரென்று இதைச் சொன்னர்.

வடக்கே ஆங்கிலத்துக்கு எதிராக அரசியல் அடிப்படையில் நடத்தும் வன்முறைக் கிளர்ச்சிகளைக் கண்டித்த திரு. கட்கர்,

"இந்த நிலை நீடிக்குமானல், தமிழகத்தில் மட்டுமே இருக்கும் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி விந்தியத்துக்குத் தெற்கே வெகுவிரைவாகப் பரவிவிடும்"

என்றார்.

இந்தி வெறி வளருகிறது

# அரசியல் சட்டம் குறுக்கிடாவிட்டால் தேவநாகரி எண்களைப் பயன்படுத்துவோம்!

## உத்தரப் பிரதேச முதலமைச்சர் அறிவிக்கிறார்

"சட்டம் மட்டும் குறுக்கிடாமல் இருந்தால், ரோமன் முறை எண்களுக்குப் பதிலாக, தேவநாகரி எழுத்துக்களைப் பயன்படுத்துவதில் எனக்கு எள்ளளவு தயக்கமும் இல்லை"

என்று, உத்தரப் பிரதேச முதலமைச்சர் சரண் சிங், உ. பி. சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்.

"இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து தேவையான ஆணைகளைப் பிறப்பிக்கவும் முயல்வதாக" அவர் உறுதி அளித்திருக்கிறார்.

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் ரோமன் எண்களைப் பயன்படுத்தி இருப்பதைக் குறித்து திரிவேதி ராவ் என்ற காங்கிரசு உறுப்பினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இதைச் சொன்னர் சரண் சிங்.

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 6 (21—12—67) வியாழன்

# மாநில அரசுகளுக்கு

## தேசாய் திணிக்கும் தொல்லை!

[1]

மக்கள் அனைவருக்கும் தேவைப்பட்டக்கூடிய இன்றியமையாப் பண்டங்களின் விலை, ஒரு நிலையில் நில்லாது நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போவதற்கு இந்திய அரசாங்கத்தின் நிதிக் கொள்கையே காரணமாகும். எனவே, பண்டங்களின் விலை ஏருமல் இருப்பதற்கும் குறைவதற்கும் ஏற்ற நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டிய கடமையும் மத்திய அரசாங்கத்தையே சாரும் என்பது வெளிப்படை.

இந்தத் தொடர்பில், பண்டங்களின் விலை மேலும் கூடிவிடாமல் தடுத்துநிறுத்த இந்திய அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அளித்து வெற்றி தேடித்தர வேண்டியது ஒன்றுதான் மாநில அரசாங்கங்களுக்குச் சட்டப்படி இருந்துவருகின்ற கடமையாகும். இந்த ஒரு கடமையைத் தவிர, பண்டங்களின் விலையேற்றத்தைத் தடுக்கவோ, குறைக்கவோ மாநில அரசாங்கங்கள் மேற்கொள்ளக்கூடியது வேறு எதுவுமில்லை.

இதை மெய்ப்பிக்க, இரண்டு நாட்களுக்கு முன்னர் நமது உணவு அமைச்சர் மதியழகன் அவர்கள், வேர்க்கடலையும் அதன் எண்ணெயும் தமிழகத்தைவிட்டு வெளியேறுவதைத் தடுக்க அதிகாரமளிக்கும்படி, தமிழக அரசாங்கம் ஆறு - ஏழு மாதங்களுக்கு முன் இந்திய அரசை வேண்டிக்கொண்டதையும், அவ்வேண்டுகோள் இன்றுவரை அலட்சியம் செய்யப்பட்டு வருவதையும் எடுத்துக்காட்டியுள்ளதே போதுமானதாகும்.

வெல்லத்தின் விலையைக் குறைத்திட—வெளி மாநிலங்களுக்கு வெல்லம் ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுக்க—தமிழக அரசாங்கம் எடுக்கத் துணிந்த நடவடிக்கைக்கு, இந்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைக்காததும் மற்றெரு சான்ருகும்.

இந்த நிலையில், 'தனிநபர் வாழ்க்கைச் செலவு கூடிவிட்டது' எனக் காரணம் காட்டி நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய், மத்திய அரசாங்க ஊழியர்களின் விலைவாசி உயர்வுப் படியைக் கூட்டியுள்ளார். 'கடந்த 12 மாதங்களில் சராசரி பண்டங்களின் விலைவாசி 10 புள்ளி அளவுக்கு உயர்ந்து 205 புள்ளியாகக் கூடியிருக்கிறது' எனக் காரணம் காட்டி, 6 ரூபாய் முதல் 33 ரூபாய் வரையில் பஞ்சப்படி உயர்த்தப்பட்டுள்ளது.

விலைவாசி, 205 புள்ளி அளவுக்குக் கூடியிருக்கிறது என்பது உண்மை; அதை நம்பாமலிருப்பதற்கு நியாயமில்லை. விலைவாசிப் புள்ளி உயர்ந்துள்ளபொழுது, அவ்வுயர்வுக்கேற்ப இந்திய அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படியை நிதி அமைச்சர் கூடுதலாக்கி இருப்பதில் தவறில்லை. அரசாங்க ஊழியர்களுக்குக் காலத்தோடு செய்ய வேண்டியதை, நிதி அமைச்சர் செய்திருக்கின்ருர் என்பதிலும் குறைகூறுவதற்கு எதுவுமில்லை.

விலைவாசிப் புள்ளி உயர்ந்திருப்பதால், இந்திய அரசாங்க ஊழியர்களுக்கு மட்டுந்தான் வாழ்க்கைச் செலவு முன்னைவிட இன்று கூடியிருக்கிறது என்பதில்லை; மாநில அரசாங்க ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவு கூடித்தான் இருக்கிறது.

இந்திய அரசாங்க ஊழியர்களின் பஞ்சப்படி உயர்த்தப்படுகின்றபொழுதெல்லாம், அதே அளவுக்குத் தங்கள் பஞ்சப்படியையும் உயர்த்த வேண்டும் என மாநில அரசுகளின் ஊழியர்கள் கோரிவந்திருக்கின்றனர் என்பது நடைமுறை உண்மை. இக்கோரிக்கையில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. இது அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய நியாயமே ஆகும்.

ஆனல், மாநில அரசு ஊழியர்களின் கோரிக்கை நியாயமாக இருந்திட்டாலும், அக்கோரிக்கையை முழு அளவில் நிறைவேற்றிவைக்க, மாநில அரசுகளிடம் போதிய நிதி வசதி கிடையாது. இக்காரணத்தினல், தங்கள் ஊழியர்களின் கோரிக்கையை, உடனடியாக நிறைவேற்றிவைக்க முடியாமல், மாநில அரசாங்கங்கள், எதையாவது கூறிக் காலத்தைக் கடத்திவருகின்றன.

இவ்வாறு தங்கள் கோரிக்கையை நிறைவு செய்யாமல் காலங்கழித்துவரப்படுவதைக் கண்டதும், தங்கள் மாநில அரசாங்கங்கள் மீது ஊழியர்கள் கசப்படைகின்றனர். தங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள நேரடி நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அச்சுறுத்த வேண்டிய கட்டாயத்துக்கு ஊழியர்கள் வந்துவிடுகின்றனர். இதற்குப் பின்னர், அரசாங்க ஊழியர்கள் மேற்கொள்ளக்கூடிய நேரடி நடவடிக்கைகளின் விளைவைத் தவிர்ப்பதற்காக, அவர்களுடைய கோரிக்கையைக் குறைந்த அளவுக்காவது நிறைவேற்றிவைக்க மாநில அரசாங்கங்கள் முன்வருகின்றன.

மாநில அரசாங்க ஊழியர்கள், 'பஞ்சப் படியை உயர்த்த வேண்டும்' என்ற கோரிக்கையை வெளியிடுகின்ற காலத்துக்கும்—அக்கோரிக்கையை மாநில அரசுகள் ஒப்புக்கொண்டு செயல்படுத்துகின்ற காலத்துக்கும் இடையிலிருக்கின்ற காலத்தில், இந்திய அரசாங்கத்தின் நிதித்துறை நடவடிக்கையின் விளைவாக மீண்டும் விலைவாசிப் புள்ளி உயர்ந்துவிடுகிறது. இதைக் கண்டதும், தங்கள் பஞ்சப் படியை மேலும் கூட்டித் தரவேண்டும் என மத்திய அரசாங்கத்தை, அதன் ஊழியர்கள் நெருக்குகின்றனர். காலந்தாழ்ந்த முடிகின்றவரையில் காலந்தாழ்த்திவிட்டு, இறுதியாக பஞ்சப் படியை மேலும் கூட்டித்தர இந்திய அரசாங்கம் முன்வருகிறது.

மத்திய அரசாங்க ஊழியர்கள் பஞ்சப் படி உயர்வுபெற்றதை முன்மாதிரியாகக் காட்டி, தங்களுடைய பஞ்சப் படியைக் கூட்டித் தரவேண்டும் என மாநில அரசாங்க ஊழியர்கள் கோருகின்றனர். காலங் கடத்திவந்து, தங்கள் ஊழியர்களின் கோரிக்கையை மாநில அரசாங்கங்கள் முடிவாக ஒப்புக்கொள்ளுகின்றன.

இப்படியே இந்த நச்சு வட்டம் கடந்த இருபதாண்டுக்காலமாகச் சுழன்றுகொண்டே வருகிறது. இந்த நச்சு வட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய நாள், எந்த நாளோ?

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்றையத் தமிழக அரசாங்கம், முதன்முறையாக மத்திய அரசாங்க ஊழியர்கள் பெற்றுவந்த அளவுக்குச் சமமாகத் தனது ஊழியர்களுக்கும் பஞ்சப் படியை உயர்த்தியது. ஏற்கனவே இருந்துவந்த காங்கிரசு அரசாங்கமும் இதைச் செய்ததில்லை; பிற மாநில அரசாங்கங்களும் செய்ததில்லை. அறிஞர் அண்ணு அவர்கள்—'தமிழக முதவமைச்சர்' என்ற முறையில்—இந்திய அரசாங்க ஊழியர்களுத்கும்–தமிழக அரசாங்க ஊழியர்களுக்குமிடையில் பஞ்சப் படியில் நீடித்து இருந்துவந்த ஏற்றத்தாழ்வை ஒழித்து, ஒத்த அளவில் பஞ்சப் படியை, தமிழக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கினர்.

இது நிகழ்ந்து இன்னும் மூன்று திங்கள்கூட முடியவில்லை; இதற்குள்ளாக மத்திய அரசாங்கம், தனது ஊழியர்களின் பஞ்சப் படியை மேலும் உயர்த்தியுள்ளது,

இவ்வாறு உயர்த்தியிருப்பதன்மூலம், அதற்கொப்ப தங்கள் பஞ்சப் படியையும் உயர்த்தித் தரவேண்டும் எனக் கோருவதற்கான தூண்டுதலை மொரார்ஜி தேசாய், தமிழக அரசாங்க ஊழியர்களுக்குத் தாராளமாகத் தேடித் தந்திருக்கின்ருர். இத்துறையில், இரண்டொரு அமைப்புகளிலிருந்து கோரிக்கையும் கிளம்பியுள்ளது; மேலும் பல கோரிக்கைகள் கிளம்பக்கூடும்.

தாம் நிதி அமைச்சராக இருக்கின்ற அரசாங்கத்தின் ஊழியர்களுக்குப் பஞ்சப் படியை உயர்த்தியதன்மூலம், மறைமுகமாக மாநில அரசாங்க ஊழியர்களைத் தூண்டிவிட்ட நிதி அமைச்சர், தங்கள் ஊழியர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றிவைப்பதற்குத் தேவைப்படக்கூடிய நிதியை, மாநில அரசாங்கங்களுக்கு மானியமாகக் கொடுத்துதவ வேண்டும். இவ்வாறு உதவி செய்ய நிதி அமைச்சர் தேசாய் தயாரா என்ருல், அதுதான் இல்லை!

ஆசையைத் தூண்டிவிடத் தயார்; ஆனல், அதை நிறைவேற்றிவைக்கத் தயாராக இல்லை அவர்!

தங்கள் ஊழியர்களிடமிருந்து கோரிக்கை கிளம்பினல், அக்கோரிக்கையை நிறைவேற்றிவைக்கத் தொடர்புடைய மாநில அரசாங்கங்கள் விரும்பினல், கோரிக்கையை நிறைவேற்றிவைக்க வேண்டிய பொறுப்பு முழுவதும் அந்த அரசாங்கங்களையே சார்ந்தது என அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளார் மொரார்ஜி தேசாய்!

—கா. க.

# இந்தி எதிர்ப்புக்கு நீண்ட வரலாறு உண்டு

## தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டவர்களும் எங்கள் பக்கம் இருக்கின்றனர்

### 'உறுதிமொழியை உருக்குலைக்கவா புதிய சட்டம்?'— நாடாளுமன்றத்தில் க. அன்பழகன் முழக்கம்

நாடாளுமன்றத்தில் ஆட்சிமொழித் திருத்த மசோதாமீது நடந்த பொது விவாதத்தில் தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் முழுவிவரம் இங்கு தரப்படுகிறது:—

### எங்கள் கோரிக்கையின் நிலை?

"நீண்ட நாட்களாகவே நாம், இந்த ஆட்சிமொழிப் பிரச்சினை குறித்துச் சிந்தித்துக்கொண்டு வருகிறோம்.

தென்னுட்டிலும், இந்தி பேசாத மாநிலங்களிலும் உள்ள எதிர்ப்புக் கிளர்ச்சி காரணமாகவே மத்திய அரசு இம்மசோதாவை இந்த அவையில் கொண்டுவந்திருக்கிறது.

இந்திதான் இந்த நாட்டின் ஒரே ஆட்சிமொழி என்பதை ஏற்றுக்கொள்ளாதவர்களையும் பொதுவாக இந்தி பேசாத மாநில மக்களையும் திருப்தி செய்வதற்காகவே இம்மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

என்ருலும், இம்மசோதாவில் சில மாறுதல்கள் செய்யவேண்டும் என்று விரும்பி காங்கிரசுக் கட்சியின் சார்பில் திருத்தங்கள் சில கொடுக்கப்பட்டிருப்பது, இம்மசோதாவை, உறுதிக் குறைவுடையதாகச் செய்யும்.

அதுதான் அவர்களுடைய எண்ணம் என்ருல், இம்மசோதாவினல் இந்தி பேசாத மக்கள், என்றும் திருப்தியடையமாட்டார்கள்.

முழு மூச்சுடன் திணிக்கப்படும் இந்தியைத் தொடர்ந்து எதிர்த்துவரும் நாங்கள்—அதற்காகப் போராடிய காலத்தில்—இப்படிப்பட்ட மசோதா ஒன்று தேவை என்பதற்காகப் போராடவில்லை; 'அரசியல் சட்டம் திருத்தப்படுவதன் மூலம் நிலையான உத்தரவாதம் தேவை' என்பதுதான் எங்களுடைய கோரிக்கையாகும்.

### சட்டத்தை உருவாக்கியவர்கள் எந்த நிலையில் இருந்தனர்?

1950-ம் ஆண்டில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது; அச்சட்டம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆனல் நியமிக்கப்பட்ட சில உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டது.

அந்த நாட்களில் அவர்களும் ஒரு கட்சியின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட—அதாவது காந்தியின் சீடர்களின் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களால்தான் அரசியல் சட்டம் எழுதப்பட்டது.

காந்தி என்ன சொன்னரோ—'அதுதான் சரியானது' என்ற கொள்கையுடையவர்கள் அவர்கள்.

அதுமட்டுமன்றி, பண்டித நேருவின் ஆணைக்குக் கட்டுப்பட்டவர்கள்.

அப்படிப்பட்ட நிலையிலுள்ள அவர்கள், 'சில காலத்திற்குப் பின் இந்திதான் ஒரே ஆட்சிமொழியாகும்' என்ற கருத்துக் கொண்டிருந்த காரணத்தினல் அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒரு விதியாக இதனைச் சேர்த்துவிட்டனர்!

### காலமும் மாறியது— கருத்தும் மாறிவிட்டது!

என்னுடைய கருத்துப்படி — 20 ஆண்டுகளுக்குப் பின் அடுத்த புதியதொரு பாரம்பரியத்தைச் சார்ந்தவர்கள் நாடாளுமன்றத்திற்கு வந்திருக்கிருர்கள். இருப்பினும் பழைய நாட்களைச் சார்ந்த முதியவர்களும் இம்மன்றத்தில் இருக்கிருர்கள்; அவர்களிடத்தில் எனக்கு மரியாதை உண்டு.

அரசியல் நிர்ணய சபையில் அங்கம்வகித்த கிருபளானி, விஜய லட்சுமி பண்டிட் போன்ற பெருந்தலைவர்களிடம் எனக்குப் பெருமளவில் மதிப்பு உண்டு. அவர்களில் சிலர் இந்த மாமன்றத்தில் இப்போதும் இருக்கிருர்கள்; ஆனல் இக்காலம், அவர்களுடைய காலத்தைப் போன்றதல்ல; காலமும் மாறிவிட்டது — ஆகவே, நம்முடைய கருத்துக்களும் மாறிவிட்டன! அதனல், தேசிய இயக்கத்திற்கும் உணர்ச்சிகளுக்கும் ஒருமைப்பாட்டிற்கும் நாங்கள் எதிரிகள் என்பது அதற்குப் பொருளாகாது!

நாங்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படித்த நாட்களில், காங்கிரசு இயக்கத்தில் பணியாற்றியவர்கள்தான்!

### உரிமையைக் காப்பாற்ற அன்றே போராடினேம்!

தமிழக அரசியல் தற்போது அமைச்சர்களாக இருக்கும் எனது நண்பர்கள் சிலர், காங்கிரசுக் கட்சியில் இருந்திருக்கிருர்கள்; ஆனல் 'காங்கிரசுக் கட்சியில் தொடர்ந்து நீடித்திருப்பது எங்களுடைய நாட்டு மொழி உரிமையைத் தகர்த்துவிடும்' என்பது தெரியவந்தது. 1937-ம் ஆண்டில் சென்னை மாநில முதலமைச்சராக இருந்த சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள், இந்தியைப் பள்ளிகளில் கட்டாயமாகப் புகுத்திய அந்த நாட்களிலேயே இந்த எதிர்ப்பு ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ்நாட்டையும், அதன் இலக்கியம்—கலாச்சாரம்—தமிழக மக்கள் கொண்டிருந்த மொழி உணர்ச்சி—வேறு எந்த மொழியும் போட்டிபோட முடியாத நிலையிலிருந்த தமிழ்க் கலாச்சாரம்—ஆகிய இவைகளை நன்கு உணர்ந்திருந்த பெரியார் ஈ. வெ. இராமசாமி உள்ளிட்ட மூதறிஞர்கள், பள்ளிகளில் அந்த நாட்களில் கட்டாயமாக இந்தியைப் புகுத்தியதை எதிர்த்துப் போரிட்டனர்!

1937-ல் நடைபெற்ற அந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, 1947-லும் தொடர்ந்தது!

### ஒரு மொழி ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள இயலுமா?

நாடு விடுதலையடைந்தபோதிலும், விடுதலையினல் ஏற்பட்ட பலன்களில், பல்வேறு கருத்துக்களைப் பலர் கொண்டிருந்தனர்.

நாடு விடுதலையடைந்தபோது, எங்கள் தலைவரான தமிழக முதல்வர் அறிஞர் அண்ணு அவர்கள் நாட்டு விடுதலையைப் பற்றிப் புகழ்ந்து பேசி பெருமிதம் கொண்டிருந்தபோது, பல தலைவர்கள், நாட்டுக்கு விடுதலை கிடைத்ததைப் பற்றி மகிழ்ச்சி கொள்ளவில்லை; ஏனெனில், வட இந்தியர்களின் ஆட்சியின்கீழ் தாங்கள் புதிய விலங்குகளால் பிணைக்கப்பட்டிருப்பதாக அவர்கள் நினைத்தார்கள்; 'சில நிலைமைகளுக்கு உட்பட்ட புதிய அடிமைகளாகவே ஆக்கப்படுவோம்' என்பதுதான் அவர்களுடைய வாதமாகும்.

ஆகையினல்தான், அங்கு இந்தி எதிர்ப்பு உணர்ச்சி தொடர்ந்த வண்ணமிருக்கிறது. 1937-முதல் இன்றுவரை அந்த எதிர்ப்புத் தொடர்ந்து வருகிறது.

இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் தங்களுக்குள் சமமாக

(3-ம் பக்கம் பார்க்க)

# எதற்கும் பயனற்ற இந்தியை நாங்கள் ஏன் ஏற்கவேண்டும்?

[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

வாழவேண்டுமானால், 'இந்திதான் இந்த நாட்டின் ஒரே ஆட்சிமொழி' என்ற வாதத்தை அவர்கள் (இந்தி எதிர்ப்பாளர்கள்) ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்!

## ஆங்கில மொழியில் ஏன் கருத்தை விளக்கினர் ?

நாங்கள் ஆங்கிலத்தினால் மயங்கிவிடவில்லை. தேவை காரணமாகத்தான்—அதாவது, வேறு வழியில்லாமையால்—நான் ஆங்கிலத்தில் பேசுகிறேன்.

மதிப்பிற்குரிய தலைவர் கிருபளானி, ஆங்கிலத்தில்தான் பேசினார்; 'இந்தி ஆட்சிமொழியாகவும், இணைப்பு மொழியாகவும் ஆகும்—ஆகலாம்' என்று ஆங்கிலத்தில் தான் வாதாடினார்.

அப்படிப்பட்ட நிலையில் ஆங்கிலத்தில் ஏன் அவர் வாதாடினார் என்றால், 'நம்முடைய எண்ணங்களை வருங்கால இளைஞர்களுக்கு அம்மொழியில்தான் தெளிவாக எடுத்துச் சொல்லமுடியும்' என்பதால்தான்!

திரு. டாங்கே இந்தியில் பேசத் தொடங்கினார்; ஆனால் அவருடைய வாதங்களை ஆங்கிலத்தில் தான் எடுத்துரைத்தார்.

## இந்திக்கு அடிபணிய எந்நாளும் இயலாது !

'இந்த நாட்டில் இந்தி மொழி பரவவேண்டும்; அம்மொழிக்கு நாட்டில் மதிப்புக் கிடைக்க வேண்டும்—தகுதி தரப்பட வேண்டும்' என்ற நம்பிக்கையுடைய இந்தி பேசுகின்ற மக்களை நான் மதிக்கிறேன்.

**எந்த வடிவத்தில்—எந்தவகையில் இந்தி திணிக்கப்பட்டாலும், அதற்கு நான் அடிபணியமாட்டேன்.**

**"இந்திக்கு இந்த நாட்டில் எத்தகையதகுதி தரப்படுகிறதோ அதே தகுதி எங்களுடைய தாய்மொழியான தமிழுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த மக்கள் உணர வேண்டும்" என்று நான் விரும்புகிறேன்.**

## காலக் கட்டம் வரையில் காத்திருக்கத்தான் வேண்டும்

வங்காளம், மராத்தி போன்ற பிற மாநில மொழிகளும் இந்த நாட்டில் சமவாய்ப்பு—சம தகுதி உள்ள மொழிகளாக இருக்க வேண்டும் என்பதை என்னுடைய நண்பர்கள் ஒப்புக்கொள்வார்கள்.

மத்திய ஆட்சி வரையில் எல்லா வகையிலும் நம்முடைய மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும் என்ற யோசனையை நான் வரவேற்கிறேன்; அந்தக் காலக் கட்டம் வரையில், இந்தி பேசும் மாநில மக்கள் பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

அவர்களோடு எங்களையும் அழைத்துச்செல்ல விரும்பினால்—எங்களிடையே நல்ல நம்பிக்கையை உருவாக்க விரும்பினால்—நாம் அனைவரும், 'பாரத மாதா' வின் புதல்வர்கள் என்று நினைப்பார்களானால்—எங்களுடைய இரத்தமும் அவர்களுடைய இரத்தமும் ஒன்று என்றால்—எங்களுக்கேற்ற இடம் தருகின்ற வரையில் நீங்கள் காத்திருக்க வேண்டும்.

இந்தியோடு தமிழ் மொழிக்கும் உரிய இடத்தைத் தாருங்கள்!

கன்னடம், தெலுங்கு போன்ற மாநில மொழிகள் அத்தனையும் ஆட்சிமொழியாகும் வாய்ப்பினைத் தாருங்கள்!

## பரந்த உள்ளம் இருந்தால் சூழ்நிலை வேறாக இருக்கும் !

இந்திய யூனியன் பல்வேறு அரசாங்கங்களைச் சார்ந்த—பல்வேறு மாநிலங்களைக்கொண்ட ஒன்றிப்பு ஆகும்.

மத்திய அரசு அதிக அதிகாரத்தைப் படைத்ததாக இருந்தாலும், அதற்குட்பட்ட மாநில அரசாங்கங்களுக்கும் ஓரளவு தனி உரிமை உண்டு; அந்த உரிமையை நீங்கள் மதிப்பீர்களானால், அந்தந்த மாநிலங்களின் ஆட்சிமொழிகளுக்கும் உரிய தகுதியை நீங்கள் அளிக்கவேண்டும்.

மத்திய அரசில் உள்ள பாராளுமன்ற விவகார அமைச்சர் இராம் சுபாக்சிங் போன்ற பரந்தஉள்ளம் கொண்டவர்கள் இருக்கலாம்; 'நாமெல்லாம் சகோதரர்கள்; என்னுடைய கலாச்சாரமும் உங்களுடைய கலாச்சாரமும் ஒன்று' என்ற அவருடைய பேருருவத்தைப் போன்ற உள்ளம் எல்லோருக்கும் இருந்தால் சூழ்நிலையே வேறாக இருக்கும்.

அவர் இதனை ஒப்புக்கொள்வார் என்று நினைக்கிறேன்; ஆனால், அரசியல் சட்டம் இதனை ஒப்புக் கொள்ளாது.

## ஏன் இந்தப் பாகுபாடு ?

அரசியல் சட்டத்தில் உள்ள 8-வது பிரிவில், தமிழ் மொழியை, 'மாநில மொழி' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறீர்கள்; ஆனால் அதே அரசியல் சட்டத்தில், இந்திக்கு, 'ஆட்சிமொழி' என்ற தகுதியை அளித்திருக்கிறீர்கள்!

இந்தியைத் திணிக்க நீங்கள் 15 ஆண்டுகள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்! அக்கால அளவிற்குள்ளேயே இந்தியைத் திணிக்க உங்களால் முடியவில்லை! இந்தி மொழியும் போதிய தகுதி பெற்றிருக்கவில்லை! அதனை நீங்கள் வளர்க்கவுமில்லை!

"இன்னும் 15 ஆண்டுகளில்கூட இந்தி மொழி வளர்ச்சியடைய முடியாது" என்று அவர்கள் கூறுகிறார்கள்; நான் இந்த நிலையைக் கண்டு மிகவும் வருந்துகிறேன்.

## எந்த இந்தியை வளர்ப்பது ?-- உங்களுக்குள் ஏன் வேற்றுமை

'இந்தி மொழியை வளரச் செய்யவேண்டும்' என்று இந்தி வெறியர்கள் முற்படும்போது, 'எந்த இந்தியை வளர்ப்பது' என்று அவர்களுக்குள்ளாகவே சண்டையிட்டுக்கொள்கிறார்கள்!

"இந்துஸ்தானி இந்தியை வளர்ப்பதா? உருது மொழியில் உள்ள சொற்களைச் சேர்த்து இந்தியை வளர்ப்பதா? டெல்லி, மீரட் பகுதி மக்கள் பேசும் 'கடிகோலி' இந்தியை வளர்ப்பதா? 'பிராஜ்பாஷா'வை வளர்ப்பதா? சமஸ்கிருதத்திலிருந்து சொற்களை எடுத்து இந்தியோடு சேர்த்து வளர்ப்பதா? ஆங்கிலம் அல்லது உலக மொழிகள் எதிலிருந்தாவது சொற்களை எடுத்துக் கையாள்வதன் மூலம் இந்தி மொழியை வளர்ப்பதா?"—என்று சண்டையிட்டுக்கொள்கின்றனர்.

எங்களைத் திருப்தி செய்ய, 'தமிழ் மொழிச் சொற்களைக்கூட இந்திக்காக எடுத்துக்கொள்ளலாம்' என்று அவர்கள் கூறுவார்கள்; நாங்கள் அதற்காக யாசகம் செய்யவில்லை! தங்களுடைய மொழிச் சொற்களைக் கொண்டு இந்தியை வளர்க்க வேண்டும் என்ற நிலையில் மற்ற மொழிகள் இருப்பதாகத் தெரியவில்லை!

## வேறுவழி ஏது உங்களுக்கு ?-- சங்கடம்தான் மிச்சமாகும் !

இந்திக்கு இயற்கை வளம்—இயற்கையான வளர்ச்சி—இயற்கையான முன்னேற்றம் ஏற்படுகின்றவரை நீங்கள் காத்திருக்க வேண்டும்; இதைத்தவிர வேறு வழி இல்லை!

இந்தி மொழியைத் திணிக்க நீங்கள் விரும்பினால், 'தற்போது நடத்துவதைப்போல் அரசாங்கத்தை அதே நிலையில் நடத்த முடியாது' என்று நான் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஆட்சியை நடத்த மெத்த சங்கடப்படுவீர்கள்!

## பரிசோதனைக் கட்டத்தில்தான் இந்தி மொழி இருக்கிறது !

இந்தி பேசாத மாநில மக்களுக்குச் சலுகை அளிப்பதற்கும் அதோடு அரசாங்கத்தை நல்ல முறையில் நடத்தவும் ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டும்.

உங்களுக்கு வேறு ஏதாவது குறிக்கோள் இருக்குமானால், அது என்ன என்பதை என்னிடம் தயவு செய்து சொல்லிவிடுங்கள்.

இந்தி மொழி மட்டும் தெரிந்த மக்கள் உள்ள உத்தரப் பிரதேசத்தில்கூட, இந்தியில் நிர்வாகத்தை நடத்த முடியாமல் ஆங்கிலத்தின் மூலம்தான் நிர்வாகத்தை நடத்த சிலர் அங்கு உதவி செய்கின்றனர்.

பீகார், இராஜஸ்தான் போன்ற இந்தி பேசும் மாநிலங்களில்கூட இந்தி மொழியிலேயே முழுக்க முழுக்க நிர்வாகத்தை நடத்த முடியவில்லை. இன்னும் நீங்கள் பரிசோதனைக் கட்டத்திலேயே இருக்கிறீர்கள்,

தமிழ், வங்காளி போன்ற வளம் நிறைந்த மொழிகள் இருக்கும் போது, மாநில அளவிலேயே பரிசோதனைக் கட்டத்திலிருக்கும் இந்தி மொழியை இந்தியா முழுவதும் திணிக்க நீங்கள் நினைக்கிறீர்கள்!

## வடக்கு வடக்குதான் !

இந்தி நண்பர்கள் மீது எனக்குத் தனிப்பட்ட வெறுப்பேதுமில்லை; இந்தி மொழியின் மீதும் எனக்கு வெறுப்பில்லை; நான் கல்வி கற்ற அந்த நாட்களில், பள்ளியில் முழுக்க முழுக்க இந்தியிலேயே படித்திருப்பேனானால், இந்தி மொழியை விரும்புகிறவர்களுள் நானும் ஒருவனாகவே இருப்பேன்.

1934—35—37-ம் ஆண்டுகளில் எனக்கு 12 அல்லது 13 வயது இருக்கும்போது என்னுடைய தந்தையார், தேசிய இயக்கத்தில் ஈடுபட்டிருந்தார்; அப்போது வாரத்திற்கு இரண்டு மணி நேரம் இந்தி மொழி பயின்றேன்; எங்கள் பகுதியில் இந்தியினால் யாதொரு பயனுமில்லையாதலால், இந்தி எழுத்தைக்கூட நான் இப்போது மறந்து விட்டேன்.

ஆனால், நாங்கள் பள்ளிகளில் பயின்ற காலங்களில் இந்தியை சிறிதளவாவது கற்று வந்தோம் இதனை இம்மன்றத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

வட இந்தியாவில் உள்ள எந்தத் தலைவராவது—இந்திப் பகுதியைச் சார்ந்த எந்தத் தலைவராவது, 'தமிழில் பேச முடியும்; தமிழைக் கற்றுக் கொண்டார்கள்' என்பதை நான் காணமுடிகிறதா? இல்லையே! அது இயற்கையான மனப்போக்காகும்! வடக்கு வடக்குதான்!

## புறக்கணிக்கும் நிலை ஏன் ?

**நாம் சாதாரணமாகச் சொல்வதைப்போல், இந்தியாவில் உள்ள பீகார், உத்தரப் பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்கள்தான் முழுமையான இந்தியாவாகக் காணப்படுகிறது!**

**இந்தியாவின் ஏனைய பகுதிகள்—அவற்றின் கலாச்சாரம் முதலிய யாவும் பிறரால் புறக்கணிக்கப்படுகின்றன!**

## வடவரின் முயற்சி அது !

'மக்களுக்காக இந்தி மொழியை வளர்க்க வேண்டும்' என்று பெருங் கவிஞர்களும், மற்றவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பற்றிய பல நிகழ்ச்சிகளை கிருபளானி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்; அது உண்மைதான்; ஆனால் விந்தியத்திற்குத் தெற்கே உள்ளவர்கள் யாரும், இந்தி மொழியின் ஆக்கத்திற்காக உதவினாரென்பதில்லையே! வட பகுதியிலுள்ளவர்கள்தானே பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டார்கள்?

## தென்னகத்தில் அந்த நிலை இருக்க இயலாது !

இந்தியை, 'பொது மொழி' என்று சொல்வதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. 'வட இந்தியாவில் இந்தி பொது மொழி' என்ற நிலை சரியானதாகவிருக்கலாம்; ஆனால் தென்னாட்டில் அத்தகைய நிலை இருக்கமுடியாது!

ஐதராபாத்தில் உள்ள சிலர் இந்தி, இந்துஸ்தானி அல்லது உருது பேசுவதனாலோ-பெங்களூரில் உள்ள சாதாரண தொழிலாளர்கள் சிலர் அம்மொழிகளைப் பேசுவதினாலோ—இந்தி, பொது மொழியாகிவிடாது! அவர்கள் ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளைப் பேசுகிறார்கள்.

பெங்களூரில் உள்ள ஜட்கா வண்டி ஓட்டுபவர்கள், இந்தி மட்டும் பேசவில்லை; திரு. பிராங் அந்தோணியை அவர்கள் சந்திக்கும் போது ஆங்கிலத்தில் பேசுகின்றனர்; தமிழ், கன்னடம் போன்ற பல மொழிகளையும் அவர்கள் பேசுகின்றனர்; அது பிரச்சினையாகாது.

இவற்றையெல்லாம் நான் சொல்வது 'இந்திமட்டுமேநாட்டின் பொது மொழி ஆகிவிடட்டு' என நீங்கள் நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான்!

## சிறப்புமிக்க தமிழுக்கு அந்த நிலை ஏன் இல்லை?

இந்தியை, 'ஒரு மாநில மொழி' என்று சொல்லுங்கள்; 'மற்ற மாநில மொழிகளைவிட அதிக நிலப்பரப்பில் வழங்கும் மாநில மொழி இந்தி' என்று சொல்லுங்கள்!

வெளிநாடுகளில் நீங்கள் எப்போதாவது வாழும்போது, 'இந்தி தேசிய மொழி' என்று அடையாளத்திற்காக வைத்துக் கொள்ளுங்கள்!

நாம் அமெரிக்காவுக்குச் சென்று நமது நாட்டின் சார்பில் பேச முற்பட்டாலும் தமிழ் மொழியில் பேச முடியாது. தமிழ் தேசிய மொழியாகவோ ஆட்சிமொழியாகவோ இல்லாத காரணத்தினால் நாம் இந்தியில் பேசவேண்டும் அல்லது அவர்களுடைய மொழியான ஆங்கிலத்தில் பேச வேண்டும்.

ஒரு காலத்தில் தமிழ் உலக மொழிகளில் ஒன்றாக இருந்த போதிலும், தற்போது அத்தகைய நிலையில் அது இல்லாத காரணத்தினால், நாம் தமிழில் பேசினால் அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

"சிங்கப்பூர், மலேசியா, தென் ஆப்பிரிக்கா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளில் இப்போதும் தமிழ் பேசப்படுகிறது; ஆனால், அங்கும் தமிழ் மொழியில் நாம் பேச அங்கீகாரம் இல்லை; ஆனால் இந்திக்கு அங்கீகாரம் இருக்கிறது; காரணம், காந்தி—நேரு போன்ற மாபெரும் தலைவர்களால் தேசிய இயக்கம் வளர்க்கப் பட்டதுதான் காரணமாகும்.

அதே தேசிய இயக்கத்தில் தொண்டாற்றிய தலைவர்களும் எங்களிடம் இருக்கிறார்கள்......(குறுக்கீடுகள்)

குறுக்கீடுகளைப் பற்றி நான் கவலைப்படமாட்டேன்; கடந்த 25 ஆண்டுகளாகவே இத்தகைய குறுக்கீடுகளைக் கண்டு பழக்கப்பட்டவன் நான்.

## இரு வேறு பிரிவுகளைத் தெளிவாகக் காண்கிறீர்கள் !

நான் இங்கு சிறுபான்மையினரின் உரிமைகளைப் பற்றி வாதாடவே இருக்கிறேன். நடைமுறையில் பார்த்தால் நாங்கள் சிறுபான்மையினரல்லர்—நாங்கள் பெரும்பான்மையினர்!

இப்போது நீங்கள், 'இந்தி பகுதியினர்—இந்தி பேசாத பகுதியினர்' என்ற இரு வேறு பிரிவுகளைத் தெளிவாகக் காண்கிறீர்கள்!

இதற்கு முன்பு, இந்திக்காரர்கள்—மராத்தியர்— தமிழர்கள்—வங்காளிகள்—ஒரிய மக்கள் என்ற பாகுபாடுகளை நீங்கள் கண்டு அறிந்திட முடிந்தது; ஆனால், இப்போது எல்லா இந்தி பேசாத மாநில மக்களும், அவர்களுடைய தலைவர்களும், 'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்ற கொள்கையை ஆதரிப்பதாகவே சொல்லி வந்திருக்கிறார்கள்.

## வாக்குறுதிக்குப் பொருள் ?

பண்டித நேருவும் சாஸ்திரியும் கொடுத்த வாக்குறுதிகள் என்ன? அவர்களுடைய வாக்குறுதிகளுக்கு என்ன பொருள்? — 'ஆங்கிலம் நீடிக்கவேண்டும்' என்பதைப் பற்றிய வாக்குறுதிகள்தான் அவை; அவர்கள் அதற்கு என்ன பொருள் கொண்டிருந்தார்கள்?—'மொழி மாற்றத்திற்குக் குறிக்கப்பட்டுள்ள நாளுக்குமுன் எப்படி இருந்ததோ, அதைப்போல் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும்' என்பதுதான் அதற்குப் பொருளாகும்.

## நோக்கத்திற்குச் சான்று !

ஆட்சிமொழி மசோதா குறித்து மறைந்த லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் அறிக்கையையும் நான் படித்துக் காட்டுகிறேன்.

இந்த அவையின்முன் இருக்கும் மசோதா, 1963-ம் ஆண்டு ஆட்சி மொழி மசோதாவின் தொடர்ச்சியாகும்; இம்மசோதாவின் நோக்கங்களையும், காரணங்களையும்பற்றிய அறிக்கையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கின்றன:—

"1963-ம் ஆண்டு மே திங்களில் ஆட்சிமொழிச் சட்டம் செயலுக்கு வந்தது; 1965-ம் ஆண்டு சனவரி 26-ஆம் நாளுக்குமுன், இந்தி மொழியுடன் ஆங்கிலம் இந்திய யூனியனின் எல்லா அலுவல்களுக்கும் எப்படிப் பயன்படுத்தப்பட்டதோ அப்படியே தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும் என்பது அந்தச் சட்டத்தின் 3-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது."

## தகுதி என்ன இருந்தது ?

1965-ம் ஆண்டு சனவரி 26-ம் நாளுக்கு முன்பு எல்லா நடவடிக்கைகளிலும் ஆங்கிலம் தான் பயன்படுத்தப்பட்டது. 'ஆட்சிமொழி' என்ற ஒரு அடையாளத்தைத் தவிர இந்தி மொழிக்கு எத்தகைய தகுதியும் அப்பொழுது இல்லை!

இந்தி நம்முடைய மொழி என்பதற்காக அதை நாம் மதிக்கலாம்; இந்திக்குத் தரவேண்டிய உரிமையை நான் எதிர்க்கவில்லை; ஆனால், நடைமுறையில் இந்திக்கு யாதொரு தனி இடமும் இருந்தது இல்லை! ஆங்கிலம்தான் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்பட்டது!

## எதற்காக இம்மசோதா ?

1963-ம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்டத்தின் அறிக்கையின் நோக்கத்தில்கூட, **'ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும்; அதாவது, அதற்கு முன்பு இருந்த நிலையே நீடிக்கவேண்டும்' என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.**

மீண்டும் நாம் இந்த மசோதாவைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. எதற்காக இம்மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது? சாஸ்திரி என்ன சொன்னாரோ அது அச்சட்டத்தில் இருக்கிறது.

"இந்தி மொழியின்மீது சாஸ்திரிக்கு ஆர்வம் இல்லை' என்று இந்தி பகுதியைச் சார்ந்த மக்கள் கருதமாட்டார்கள். அவர் ஒரு பெரிய தேசபக்தர்; 'தேசபக்தர்' என்பது மட்டுமல்ல—அவர் இந்தி வெறியரின் ஆதரவாளர்!

## இணங்குவீர்களா நீங்கள் ?

1963-ம் ஆண்டு ஏப்ரல் 23-ந் தேதி இந்த அவையில் அவர் என்ன பேசினார் என்பதை, பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பேடுகளிலிருந்து நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்:—

"இந்த அவையில் குறிப்பிட்ட—பேசிய—தவறாகப் புரிந்து கொண்டுள்ள கருத்துக்களைப் போக்கப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேணடும் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

"ஆட்சிமொழிச் சட்ட 3-வது விதியில், 'எல்லா அரசாங்க நடவடிக்கைகளிலும் ஆங்கிலம் பயன்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது' என்பதை நான் இன்றும் சொல்ல விரும்புகிறேன்.

4-ம் பக்கம் பார்க்க!

# இந்தி எதிர்த்து தமிழக மாணவர்கள்

## அமைதியோடு அறப்போரில் ஈடுபட்டனர்

உலகமெல்லாம் வெட்கித் தலைகுனியும்வகையில் நாடாளுமன்றத்தில் நிறைவேறிய இந்தித் திணிப்பு மசோதாவை எதிர்க்கும் பொருட்டு கடந்த இரண்டு நாட்களாகத் தமிழக மாணவர் சமுதாயம் கிளர்ந்தெழுந்துள்ளது. தமிழகம் முழுமையிலும் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மாணவர்கள் இந்த அறப்போரில் கலந்துகொண்டார்கள் என்றாலும், 'இதைவிட மாணவர் யாரும் அமைதியாக நடந்துகொள்ள முடியாது' என்று சொல்லும் வகையில் போராட்டம் இருந்ததாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

இந்தி எழுத்துக்களைத் தார் கொண்டு அழித்தலும், சாக்குத் துண்டுகளால் தமிழ் வாழ்த்து— இந்தி எதிர்ப்பு முழக்கங்கள் எழுதலும் ஆகியவகையில் தங்கள் எதிர்ப்பு உணர்ச்சியை அவர்கள் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆங்காங்கே ஓரிரு இடங்களில் இந்திப் பெயர்ப் பலகைகள்—உரியவர்கள் ஒப்புதலுடன் அகற்றப்பட்டன.

சில இடங்களில் இரயில்கள் நிறுத்தப்பட்டன என்றாலும், அசம்பாவிதம் ஏதும் நிகழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் பல கல்லூரிகளின் மாணவர்கள், கல்லூரிகளுக்குச் செல்லவில்லை.

மாணவியர் பலர் முன்னணியில் இருந்தனர்.

## இந்திப்படக்காட்சிகள் நிறுத்தப்பட்டன

### மாணவர் அறப்போர் எதிரொலி

சென்னை, டிச. 21—

சென்னையில் வழக்கமாக இந்திப் படங்களைத் திரையிட்டுவந்த திரையரங்குகளிலெல்லாம், இன்று முதல் தமிழ்ப் படங்களைத் திரையிட முடிவு செய்துள்ளனர்.

சென்னை மாணவர்கள் இந்தியை எதிர்த்து அமைதியாகக் கிளர்ச்சி நடத்திவருவதையொட்டியே திரை அரங்குகளின் உரிமையாளர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

நகரில், அசோக், செலக்ட், ஸ்டார், எமரால்டு ஆகிய நான்கு திரையரங்குகளில்தான் இந்திப் படக் காட்சிகள் தொடர்ந்து நடைபெற்றுவந்தன.

இந்த நான்கு அரங்குகளிலும் நேற்று மாலைக் காட்சியும் இரவுக் காட்சியும் நிறுத்தப்பட்டன.

## தொலைபேசி எண்கள்

உலகத் தமிழர் மாநாட்டின் புற வேலைக் குழு அலுவலகம் சென்னை ஐலண்டு திடலில் அமைக்கப்பட்டுள்ளது.

புற வேலைக் குழு அலுவலகத்தின் தொலைபேசி எண் :

811211

புற வேலைக் குழுத் தலைவர் தோழர் நீலநாராயணன் அவர்கள் இல்லத்திலும் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது—எண் :

811350

## நடக்க இருப்பவை

### 22--12--67

**திங்கள்சந்தை**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர் : எஸ். கணேசன் ; பேசுவோர் : அ. பொ. அரசு எம்.எல்.ஏ., வேலூர் நாராயணன் எம்.ஏ.பி.எல்., எம்.சி., நா. விராசாமி எம்.எல்.ஏ., அரங்கநாதன் எம்.எல்.ஏ., கே. ஏ. இராசப்பா.

**வடிவீசுவரம்**

தி. மு. க. சார்பில் இரவு 7-30 மணிக்கு தேரடித் திடலில்; தலைவர் : முத்துக்குமாரசாமி ; பேசுவோர் : அ. பொ. அரசு, வேலூர் நாராயணன், நா. வீராசாமி, அரங்காதன், கே. ஏ. இராசப்பா, மற்றும் பலர்.

**சாத்தூர்**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணா திடலில் ; தலைவர் : சா. அப்துல் கனி ; பேசுவோர் : மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., ச. பழனியப்பன் பி.ஏ., எஸ். பி. மணியம், மற்றும் பலர்.


## 62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ்.ஐ.ஏ.ஏ. மைதானம், சென்னை-3

தொலைபேசி : 38481

22--12--67 வெள்ளி காலை 9 மணிக்கு

தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் Bar-at-Law அவர்கள் இவ்வாண்டுப் பொருட்காட்சியைத் துவக்கிவைக்கிறார்கள்.

**மாலை 4-30 மணிக்கு :**

வணக்கத்திற்குரிய மாநகராட்சி மன்றத் தலைவர் டாக்டர் அபிபுல்லா பேக் M.B.B.S., M.L.A. அவர்கள், போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசு வழங்குகிறார்.

**மாலை 6-மணிக்கு :**

திருமதி ஜானகி சுவாமிநாதன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

பொருட்காட்சி நேரம் : மாலை 2 மணிமுதல் இரவு 9 மணிவரை

நுழைவுக் கட்டணம் 25 காசு

ரேக்ளா பந்தயங்கள், இராட்சத ராட்டினம், குடை ராட்டினம், சீ-பிளேன், குழந்தைகள் இரயில், மெலாடி ஓரியண்டல் டான்ஸ், சறுக்கு விளையாட்டு, மாஜிக், மற்றும் பல கேளிக்கைகள் மிகச் சிறந்த முறையில் நடைபெறும்.

திறந்தவெளிக் கலையரங்கில் நட்சத்திர நடிகர்களின் நாடகங்கள் நடைபெறும்.

கே. கோவிந்தசாமி எம்.சி.
ஆர்கனைசர்


# பொறுப்பு உணர்வீர்! போர் முறை தவிர்ப்பீர்!

## பள்ளி செல்வீர்! பண்பு காப்பீர்!

### மாணவர்கட்கு அமைச்சர்கள் வேண்டுகோள்

சென்னை, டிச. 20—

இந்தி தெரியாத மக்களுக்குத் துரோகம் இழைத்து அவர்களை இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக்குவதே தம் இலட்சியம் என்ற பேய்த்தனத்துடன் கொண்டுவரப்பட்ட ஆட்சி மொழித் திருத்த மசோதாவை எதிர்த்த அமைதியாகப் போராடிவரும் தமிழக மாணவர்கள் தங்கள் அறப்போரைக் கைவிடும்படியும், பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்லும்படியும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் விருப்பத்திற்கேற்ப அமைதியாகப் பொறுப்புணர்ந்து நடந்துகொள்ளுமாறும் தமிழகக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும் மாணவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள் :—

### இரா. நெடுஞ்செழியன்

"தமிழக மாணவர்கள் ஆட்சி மொழி பற்றிய தங்கள் கருத்தினைத் தொடர்ந்து தெளிவாகக் கூறிவந்துள்ளார்கள்.

"தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ் ஆட்சி மொழியாகவும், அனைத்து இந்தியாவைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும்—ஆட்சி மொழியாகவும் பயன்பட்டு வரவேண்டும் என்பது, தமிழக அரசின் திட்டவட்டமான—தெளிவான கொள்கையாக இருந்துவருகிறது.

"'இந்தக் கொள்கையை நிறைவேற்றுவோம்' என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பல வாய்ப்புக்களிலும் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிவந்திருக்கிறார்கள்.

"தமிழக அரசும், முதலமைச்சரும் ஆட்சி மொழி பற்றிய முறையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள ஆயத்தமாக இருப்பதால், தமிழக மாணவர்கள் வேலைநிறுத்தம்—ஊர்வலம் கொடும்பாவி கொளுத்துதல் போன்ற ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடாமல் படிப்பில் முழுக் கவனம் செலுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழக மாணவர்கள் தங்கள் கருத்தை, மாநாடு கூட்டுதல்—தூது போதல்—ஊர்வலம் நடத்துதல்—தீர்மானம் நிறைவேற்றுதல் ஆகியவற்றின் மூலம் ஐயத்திற்கு இடமில்லாத வகையில் தெளிவாக இந்தி வெறியர்களுக்கும், இந்திய அரசினருக்கும் உணர்த்திவிட்டார்கள் ; இந்த வகையில் அவர்களது உணர்ச்சியையும் எழுச்சியையும் ஆர்வத்தையும் பாராட்டுகிறேன்.

"தமிழகமெங்குமுள்ள மாணவர்கள் இன்றுடன் ஆர்ப்பாட்டத்தை நிறுத்திவிட்டுப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செல்லும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

"முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், மாணவர்களிடத்தில் அமைதியையும்—அதே நேரத்தில் உறுதியையும் எதிர்பார்க்கிறார்கள்.

"தமிழகத்தில் அமைதியை நிலைநாட்டித் தமிழகத்தின் பெருமையை உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் உலகத்திற்கு உணர்த்த முன்வரும்படி மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

### மு. கருணாநிதி

"மாணவர்களாயினும், யாராயினும், அவர்களது இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை இந்த அரசு மதிக்கிறது.

"முதலமைச்சர் அவர்கள், 'ஆட்சி மொழி மசோதா தமிழக மக்களுக்குத் திருப்தியளிக்கவில்லை' என்பதைத் தெரிவித்து, 'தமிழக மக்களின் சக்தியை அமைதியான முறையில் திரட்ட வேண்டும்' என்று அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

"நாடாளுமன்ற தி.மு. கழகக் குழுவின் துணைத் தலைவர் கி. மனோகரன் அவர்களும், 'மொழிச் சிக்கலுககு ஏற்பட்ட முடிவு திருப்திகரமாயில்லை' என்று தெரிவித்து, 'மீண்டும் வட்ட மேசை மாநாடு அளவில் கூடி ஆராய வேண்டும்' என்று தலைமையமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறார் என்பது பற்றிய செய்தி விவரம் வந்துள்ளது.

"கடந்த இரண்டு -- மூன்று நாட்களாகத் தமிழ்நாட்டில் கிளர்ச்சி நடத்திவரும் மாணவர்களுக்குக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"இதற்கிடையே, இந்தி எதிர்ப்பு உணர்ச்சி வன்முறை அளவுக்குச் சென்றுவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது வருந்தத்தக்கதாகும்.

"தமிழக அரசு தான் வகித்துவரும் அரசுப் பொறுப்பு வாயிலாகவும், தி.மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இம்மசோதா குறித்துத் தங்கள் அதிருப்தியை வலியுறுத்திக் கூறியுள்ளவகையிலும் தமிழகத்தின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை அழுத்தந்திருத்தமாகக் காட்டியுள்ளனர்.

"இதற்கிடையே முதலமைச்சரின் கருத்தினையும், கல்வியமைச்சரின் வேண்டுகோளையும் மதித்து மாணவர்கள், மிக முக்கியமான இந்தத் தேர்வு நேரத்தில் தங்கள் கடமையுணர்ந்து பொறுப்புடன் நடந்துகொள்வதே முறையாகும்."

## செந்தமிழ்க் கவிஞர் எழுத்தாளர் பேரவை

### அமைப்புக் கூட்ட அழைப்பு

தமிழ் இலக்கிய இலக்கண மரபின் நெறிநின்று இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களைப் படைக்கும் கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் உருவாக்கி, ஒன்று சேர்த்து, அவர் தம் படைப்பிலக்கியங்களை வெளியிட்டுப் பரப்புவதை முதன்மையாகக் கொண்டு, பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் தலைமையில் 23—12—67 மாலை 6-மணியளவில், சென்னை திருவல்லிக்கேணி, பெரிய தெரு, 18-எண்ணுள்ள இல்லத்தில் செந்தமிழ்க் கவிஞர் எழுத்தாளர் பேரவை அமைப்புக் கூட்டம் நடைபெறும் ; அன்பர்கள் கலந்துகொண்டு கருத்துரை நல்குமாறு அமைப்பாளர் சிறுவை மோகனசுந்தரம் கேட்டுக்கொள்கிறார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"பெருமுறை மன்றத்தைப் பொறுத்தவரையில், இரண்டு அல்லது மூன்று நீதிபதிகளுக்குத்தான் இந்தி தெரியும். நாட்டில் உள்ள அந்தச் சட்டங்களையும் இந்தியில் மொழிபெயர்ப்பது என்பது எளிதான வேலை அல்ல ; அதற்கு ஏராளமான பணமும் காலமும் விரயம் ஆகும். இதில் காலத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதைவிட நாட்டின் ஒற்றுமையில் அக்கறை செலுத்தவேண்டும்"

என்றும் அவர், கான்பூரில் ஒரு பேட்டியில் குறிப்பிட்டார்.

## க. அன்பழகன் பேச்சு

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"மத்திய ஆட்சியின் விவகாரங்களிலும் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு எழுதுகின்ற கடிதப் போக்குவரத்துக்களிலும், மாநிலத்திற்கும்—மத்திய அரசுக்குமிடையே உள்ள கடிதப் போக்குவரத்துக்களிலும் அல்லது பாராளுமன்ற நடவடிக்கைகளிலும், ஆங்கிலம் பயன்படுத்தப்படுவதில் எத்தகைய இயலாமையும் நிர்ப்பந்தமும் ஏற்படாது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது."

### உறுதிமொழிகள் எதுவும் காப்பாற்றப்படாததேன்?

அந்த வாக்குறுதிகளில் இதைவிட அதிகம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆட்சி மொழிச் சட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் அதை மட்டும் அவர் சொல்லவில்லை. இதில் என்ன இணைக்கப்பட்டது என்றால், முந்திய சென்னையில் இருந்த காங்கிரசு அரசு கொடுத்த அறிக்கையில் தரப்பட்டிருந்த கருத்துக்கள்தான் ; இந்தியக் குடியரசுத் தலைவர் நியமித்த ஆட்சி மொழிக் குழுவிடம் தெரிவித்த நீடித்த இரு மொழிக் கொள்கைதான் அதில் அடங்கியிருந்தது.

இதற்கு என்ன பொருள் என்றால், 'இந்தி துரிதமாக பயன்படுத்தப்பட்டாலும், ஆங்கிலம் பயன்படுத்தப்படுவதில் எத்தகைய நிர்ப்பந்தமும் இருக்கக்கூடாது' என்பதுதான். இதுதான் அவர் கொடுத்த உறுதிமொழியாகும். இந்த வார்த்தைகளைத்தான் அவர் இங்கு அப்போது பேசினார்.

ஆனால், மசோதாவின் உணர்வுபூர்வமான எண்ணங்கள், அரசாங்கத்தால் காப்பாற்றப்படவில்லை. இந்த மசோதாவின் உயரிய நோக்கமும், 'ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டும்' என்று சொல்லப்பட்ட உறுதிமொழிகளும் அரசாங்கத்தாலும், இந்தியக் குடியரசுத் தலைவர் அலுவலகத்தாலும்காப்பாற்றப்படவில்லை என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

(பிற்பகுதி நாளை)

## செத்த மொழியை நம்பியிருக்கும் இந்தி !

"இந்திய மொழிகளையெல்லாம் பெற்றெடுத்தது சமஸ்கிருதம் தான் ; நம் நாட்டில் கடவுள் வழிபாடு இந்த மொழியில் தான் நடைபெற்று வந்துள்ளது ; சமஸ்கிருதம், இந்தி மொழியை வளர்த்து—வளப்படுத்தப் போகிறது"

என்று கருநாடக மாநில ஆளுநர் ஜி. எஸ். பதக், திருப்பதியில் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பட்டது.